**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

STC.No.269/2024
Complainant side witness.01

| | |
|---|---|
| பெயர் : லிங்கம் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of October 2024.

07.10.2024

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் வழக்கறிஞர் தொழில் செய்கிறேன். எனது பக்க சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். எனது பக்க ஆவணங்கள்

1) 13.05.2024 ம் தேதியிட்ட காசோலை எண்.001460 ரூபாய் 8,75,000/–த்திற்கான பாளையங்கோட்டை கிளை, Axis Bank வங்கி காசோலை பு.த.சா.ஆ.1
2) 14.06.2024 ம் தேதியில் காசோலையை முதுகுளத்தூர் கிளை தமிழ்நாடு மெர்க்கண்டல் வங்கியில் செலுத்தியதற்கான Counter Slip பு.த.சா.ஆ.2.
3) 20.06.2024 ம் தேதியில் காசோலை எண். 001460 Account Closed என்று முதுகுளத்தூர் கிளை தமிழ்நாடு மெர்க்கண்டல் வங்கியால் கொடுக்கப்பட்ட குறிப்பாணை பு.த.சா.ஆ.3.
4) 02.07.2024 ம் தேதியில் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பிற்கான அஞ்சல் ரசீது பு.த.சா.ஆ.4.
5) 02.07.2024 ம் தேதி எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் பு.த.சா.ஆ.5.
6) 03.07.2024 ம் தேதி எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுகொண்டதற்கான அஞ்சலக ஒப்தல் அட்டை பு.த.சா.ஆ.6.
7) 15.07.2024 ம் தேதியிட்டு எதிரி, எனது வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு பு.த.சா.ஆ.7.

8) 15.07.2024ம் தேதியிட்டு எதிரி, எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு பு.த.சா.ஆ.8.

புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளப்படி தீர்ப்பாக வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டு கோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.